**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(3ம் வாதி ஆஜர். 1, 2 வாதிகள் ஆஜர் இல்லை. 2ம் பிரதிவாதி ஆஜர். 1, 3 முதல் 8 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.756/2018

பி.வா.சா.1 தர்மலிங்கம்

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–</u>

1. 20.10.2020ல் நான், வள்ளியம்மாள் மற்றும் சுப்ரமணி ஆகியோர் சேர்ந்து வழக்கு நிலுவையில் இருக்கும் போது பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்வதற்கு நீதிமன்றத்தில் அனுமதி பெற்றோமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை பொறுத்து அதிலிருந்து 15 நாட்களில் அதாவது 02.11.2020 தேதியில் 6ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்பனை செய்தோமா என்றால் சரிதான். மேலும் 6ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்பனை செய்வதற்கு நீதிமன்றத்தில் அனுமதி பெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. மேற்கண்ட கிரயமான பிறகு வாதி வருவாய் துறைக்கு பெயர் மாற்றங்கள் எதுவும் ஏற்படுத்தக்கூடாது என்று கடிதம் அனுப்பியிருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் வழக்கிற்காக முரணாக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.